**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC . 21/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.7. முருகன்** |
| **Fathers Name/Husband Name** | : | **மொக்கைச்சாமி தேவர்** |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.12.2021

மு.வி: நான் தற்போது நல்லுத்தேவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு அசா1 முதல் அசா6 வரையிலான சாட்சிகள் மற்றும் சாட்சிப்பட்டியலுள்ள 7,8 சாட்சிகளை எனக்குத் தெரியும். எதிரியை எனக்குத் தெரியும். விபத்தை இறந்துபோன செல்வத்தை எனக்கு தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு சம்பவத்தினத்தன்று பகல் 1.30-2.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்தபோது அசா1 எனக்கு போன் மூலமாக தகவல்சொன்னதன்பேரில் நான் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று காயம்பட்ட செல்வத்தை பார்த்தேன். அவருக்கு தலை காயம் ஏற்பட்டுவிட்டது. அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் இறந்துவிட்டார். செல்வத்துடன் சென்ற அசா2 பிரபாகரனுக்கு தொடையிலும் கை கால்களில் அடிப்பட்டுருந்தது. தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. மேற்சொன்ன செல்வம் மற்றும் அசா2

பல்சர் இருசக்கரவாகனத்தில் உசிலம்பட்டி - பேரையூர் ரோட்டில் பண்ணைப்பட்டி விலக்கு அருகே சென்றபோது எதிர் திசையில் வந்த எய்சர் லாரி மோதி விபத்துகுள்ளானதாக தெரிந்துகொண்டேன். அசா2 உசிலம்பட்டியிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து பீரித்தி மருத்துவமனைக்கு சென்று 1மாத கலம் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அவருக்கு பிளேட் பொருத்துப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

அசா2 உங்கள் உடன் பிறந்த தம்பி என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்த இடம் மேற்கே சாலை பிரிந்து செல்லும் இடம் என்று சொன்னால் சரிதான். நீங்கள் சம்பவயிடம் போகும் போது நிறைய ஆட்கள் கூடியிருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அசா2 சென்ற இருசக்கரவாகனம் தார்ரோட்டில் கிடந்ததா என்றால் மண் பகுதியில்கிழக்கே கிடந்தது. நீங்கள் போகும்போது அசா2 சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்து இழப்பீடு அசா2 பெற்றுவிட்டாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடம் செல்லும் போது எத்தனை மணியிருக்கும் என்றால் மதியம் 2 மணி இருக்கும்.

ம.வி.இல்லை.

S.d./ Murugan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.